**செய்தி வெளியீடு எண்: 531** **நாள்:26.08.2019**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.8.2019) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல்துறை சார்பில் சென்னை பெருநகர பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக 7 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 40 அம்மா ரோந்து வாகனங்களின் சேவையை துவக்கி வைக்கும் அடையாளமாக 7 அம்மா ரோந்து வாகனங்களின் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறையினரின் பயன்பாட்டிற்காக 98 லட்சம் ரூபாய் செலவில் 201 உடல் இணை நிழற்படக் கருவிகளை வழங்கிடும் அடையாளமாக 7 போக்குவரத்து காவலர்களுக்கு உடல் இணை நிழற்படக் கருவிகளை வழங்கினார்கள்.

''பொது இடங்களில் பெண்கள் பாதுகாப்பு'' திட்டத்திற்காக மத்திய அரசு புது டில்லி, சென்னை, மும்பை, கல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், அகமதாபாத் மற்றும் லக்னோ ஆகிய 8 நகரங்களை தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் 425 கோடி ரூபாய் சென்னை பெருநகரத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல்துறையின் கீழ் 35 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 15 இதர காவலர்கள் பணியாற்றி வருகின்றனர். சென்னை பெருநகரத்தில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காகவும், குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனைத்து மகளிர் காவல் நிலைய ரோந்து பயன்பாட்டிற்காக இந்த அம்மா ரோந்து வாகனங்கள் பயன்படுத்தப்படும்.

இளஞ்சிவப்பு நிறம் கொண்ட அம்மா ரோந்து வாகனங்கள் மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களை தடுக்கவும், அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை உறுதி செய்யவும், சென்னை நகரத்திலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள், மார்க்கெட்டுகள், வழிபாட்டு

தலங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், கடற்கரை ஆகிய இடங்களில் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு தனிக் கவனம் செலுத்தப்படும்.

மேலும், சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறையினருக்கு, போக்குவரத்து விதிமீறல்கள் புரிபவர்கள் மீது வழக்குகள் பதிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் 98 லட்சம் ரூபாய் செலவில் 201 உடல் இணை நிழற்படக் கருவிகள் (Body Worn Cameras) வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 போக்குவரத்து காவலர்களுக்கு உடல் இணை நிழற்படக் கருவிகளை வழங்கினார்கள்.

இந்த உடல் இணை நிழற்படக் கருவிகளில் உள்ள 2 MP கேமராக்கள் மூலமாக ஒலி மற்றும் ஒளி பதிவுகள் (Audio and Video Recording), புகைப்படங்கள் ஆகியவற்றை பதிவு செய்யலாம். இப்பதிவுகளில் நிகழ்நேர தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை தானாகவே பதிவாகும். மேலும், இக்கேமராக்களில் பொருத்தப்பட்டிருக்கும் 4G இணைப்பு மூலமாக கேமராக்களின் நிழற்பட பதிவுகளை, காவல் துறை கட்டுப்பாட்டு அறையில் நேரலையில் கண்காணிக்கலாம். அத்துடன், போக்குவரத்து அதிகாரிகள் எங்கு வழக்கு பதிவு செய்கிறார்கள் என்பதையும் GPS தொழில்நுட்பம் மூலமாக வரைபடத்தில் நேரலையில் கண்காணிக்கலாம். இதன்மூலம், போக்குவரத்து காவல் துறை அதிகாரிகள் போக்குவரத்து விதிமீறல்களுக்கு வழக்குகள் பதிவு செய்வதில் வெளிப்படை தன்மையும், நம்பகத்தன்மையும் உறுதி செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 26.8.2019